ॐ
**Balu Saravana Sarma** *Prohithar – Astrologer*
**No9, 4th street, Kalyan Nagar, Tambaram West, Chennai 45, INDIA. Ph: +91 44 2226 1742, Cell: +91 98403 69677**
Email: prohithar@gmail.com Web: www.prohithar.com


# ◆ கத்திரி – அக்னி நட்சத்திரம் (Agni Nakshtra – Kathiri) 2011 అగ్నినక్షత్రం ◆

## அக்னி நட்சத்திரம்:

தோற்றப்பொலிவு புவி மையக்கோட்பாட்டின் அடிப்படையில் நிராயண சூரியன் பரணி நட்சத்திரத்தில் மூன்றாம் பாதத்தில் (Sun Sidereal longitude 20°00') பிரவேசிக்கும் காலம் முதல் ரோகினி நட்சத்திரத்தில் இரண்டாம் பாதத்தில் (Sun Sidereal longitude 43°20') பிரவேசிக்கும் காலம் வரை அக்னி நட்சத்திர நாட்களாகும். அக்னி நட்சத்திர கால அளவு 21 ¼ நாள்

## கத்திரி:

அக்னி நட்சத்திர காலத்தில் சூரியன் கார்திகை நட்சத்திரத்தில் பயனிக்கும் (11.5.2011 இரவு 22:52 மணி முதல் 25.5.2011 இரவு 19.05 வரை ) 15 நாட்கள் மட்டுமே கத்திரி என்று அழைக்கப்படும் மிக அதிக வெப்பமான நாட்களாகும்




" வெயில் காலத்திற்கும், பூமி சூரியனுக்கு மிக அருகில் (Perigee ) வருவதற்கும் தொடர்பு இல்லை."

பூமி சூரியனுக்கு மிக அருகில் இருக்கும் (Perigee ) காலம் தான் வடபகுதியின் (Northern Hemisphere) குளிர் கால மார்கழி மாதம்...!

**வாக்கியப்படி :** துவக்கம்: 5.5.2011 வியாழன் அதிகாலை 00:42
முடிவு: 29.5.2011 ஞாயிறு காலை 7:44

**திருக்கணிதப்படி:** துவக்கம்: 5.5.2011 வியாழன் அதிகாலை 01:31
முடிவு: 29.5.2011 ஞாயிறு காலை 6:26

Sun Sidereal longitude from ♈20°00' to Sidereal longitude ♉13.20 (43°20') days are called *Agni Nakshtra – Kathiri.* This year falls on 5th May 2011 and ends on 29th May 2011.

கத்திரியில் சில விசேஷங்களை மட்டும் தவிர்க்கவேண்டும் என்று சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றது.

## கத்திரி காலத்தில் செய்ய தகுந்தவை:

திருமணம், நிச்சியம், பெண்-மாப்பிள்ளை பார்த்தல், உபநயனம், பொது கட்டிடங்கள்(சத்திரங்கள், அரசு கட்டிடங்கள்) கட்டுதல், பரிகார ஹோமங்கள் போன்றவை செய்ய தகுந்தவையாகும்

## கத்திரி காலத்தில் செய்யக்கூடாதவை:


மொட்டை அடித்தல், நிலம் தோண்டுதல், வீடு கட்ட துவக்கம், மரங்கள், செடிகள் வெட்டுவது, தோட்டம் அமைப்பது, விதை விதைத்தல், புதிய குடியிருப்பு பகுதி அமைப்பது(பிளாட் போடுவது) போன்றவை செய்யக்கூடாது

## அறிவியல் பார்வை:


பூமி 23.5 பாகை சாய்வான நிலையில் சீரான அச்சில் சூரியனை நீள் வட்டபாதையில் சுற்றுகிறது அப்படி சுற்றும் பொழுது பூமியின் வடபுலம் (Northern Hemispheres)6 மாதங்களும் அடுத்து தென்புலம்(Southern Hemispheres)6 மாதங்களும் சூரியனின் ஒளி விழும் வகையில் உள்ளது நேராக சூரியன் விழும் காலம் கோடை என்றும், சாய்வாக சூரியனின் ஒளி விழும் காலம் குளிர் காலம் என்றும் அழைக்கப்படுகிறது. இத்தகைய மாற்றமே புவியின் பருவநிலை மாற்றத்தின் முக்கிய காரணியாகும்

The seasons are caused by a combination of things. The Earth is tilted (23.5 Degree) as it moves around the sun. Direct sunlight produces more heat than the indirect light.
Direct sunlight days are called as summer where the heat will be maximum which are known as "Agni Nakstra – Kathiri "

இதில் சூரியனின் கதிர் நேர்கோணத்தில் விழும் காலமே கத்திரி ஆகும். இக்காலத்தில் சூரியனின் மிக அதிக பட்ச வெப்பம் பூமியின் மீது தாக்கும். (படம் காண்க)




இத்தகைய கத்திரி வடபுலத்தில் உள்ள இந்தியா மட்டும் அல்ல பூமத்திரேகை கீழ் தென் புலத்தில் உள்ள நாடுகளுக்கும் ஏற்படும். தென் புலத்தில் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில், வடபுலத்திற்கு நேர் எதிரான காலத்தில் அஃது இந்தியாவில் குளிர் காலம் எனில் ஆஸ்திரேலியாவில் கத்திரி - மிகவெப்ப காலம்-ஆகும்.




## சமூக பார்வை:


கத்திரி காலத்தில் மிக அதிக வெப்பம் காரணமாக வைரஸ்களால் தோன்றும் அம்மை, காலரா ஆகிய நோய்கள் வரும் என்பதால் நோய் பரவாமல் தடுக்க மக்கள் கூடுவதை தவிர்க்கப்படவேண்டும், உடல் திறன் மிக குறைவாக இருக்கும் என்பதால் வெயிலில் அலைச்சலை தவிர்த்தல் நல்லது என்கிற பொது நலன் காரணங்களால் நம்முன்னோர்கள் இந்த கத்திரி நாட்களை தவிர்த்தனர்.

## சிவன் கோவில்களில்:



அக்னி நட்சத்திரம் துவங்கிய நாள் முதல் முடியும் நாள் வரை கர்பகிரகத்தில் சிவலிங்கத்தின் மீது தாரா பாத்திரம் எனும் கலம் தொங்கவிடப்பட்டு அதில் வெற்றி வேர் இட்டு, பன்னீர் நிரப்பி சொட்டு சொட்டாக பன்னீர் சிவலிங்கத்தின் மீது விழும் வகையில் அமைத்திருப்பார்கள். இதனால் அக்னிநட்சத்திரத்தில் சிவன் உக்கிரம் தனிந்து சாந்தமடைந்து பக்தர்களுக்கு அருளுவார் என்பது ஐதீகம்.

மேலும் சிவலிங்கம் 3 பிரிவுகாளல் ஆன தாகும், இவை அனைத்தும் சாந்து கொண்டு பிணைக்கப்பட்டு இருக்கும், அக்னி நட்சத்திர காலத்தில் சாந்து காய்ந்து சிவிலிங்கம் ஆவுடையாரில் இருந்து பிரிவதை தடுப்பதற்கும் தார பாத்திரத்தில் இருந்து விழும் நீர் உதவுகிறது




**குறிப்பு:** புவி சுயசுழற்சி மைய அச்சு சூரிய, சந்திர ஈர்ப்பு விசை காரணமாக மெதுவாக எதிர்மறையாக பம்பரம் போல சுழுலுவதால் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் கணிக்கப்பட்ட பருவகால அனுமான கணிதம் தற்பொழுது பல வேறுபாடுகளை காட்டுகிறது எனவே தற்பொழுது அதிக பட்ச வெப்பம் ஏற்படும் நாள்கள், பருவசூழல்கள் மாறுதல் அடைந்துள்ளன என்பது அறிவியல் ஆய்வுகளின் முடிவு

இப்படிப்பட்ட சுழற்சியை மேலை நாட்டினர் தற்பொழுதுதான் கண்டு பிடித்துள்ளனர் ஆனால் பல ஆயிரம் ஆண்டுகள் முன்னர் **சூரியசித்தாந்தம்** எனும் நூலில் இதுபற்றிய சூத்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது இந்திய வானியலாளர்கள் அறிவுத்திறனை வெளிப்படுத்துகிறது

***Precession of the Equinoxes***

Under gravitational attractions of the Sun, the Moon and the planets, the Earth's axis undergoes a slow, conical clockwise motion, with a period of about 25800 years, around the pole of the ecliptic and maintains the same inclination to the plane of the ecliptic. This causes the March Equinox to slide westward on the ecliptic at a rate of about 50.2'' per year. We call this *precession of the Equinoxes*.

---

பாலு சரவண சர்மா
*புரோகிதர்- ஜோதிடர்*
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென்னை 45, பாரத நாடு.
தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677
மின்னஞ்சல்: **prohithar@gmail.com** இணையம்: **www.prohithar.com**
தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகிறது
காப்புரிமை © 3.4.2011